**2026 ஜூலை மாதம் 22– ஆம் தேதி புதன்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 72/2025**

O.S. No.: 72/2025 – மல்லிகா PW1 22.07.2026
க/பெ.சுரேஷ்குமார்

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. பிரதிவாதிக்கு பல லட்சம் கடன் உள்ளதாகவும், அதை அடைப்பதற்காக என்னிடம் ரூ.14 லட்சம் கேட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி எனது உறவினர் என்பதால் அவரது வரவு செலவு அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நானும், எனது கணவரும் வருமான வரி செலுத்துபவர் இல்லை என்றால் சரிதான். ரூ.14 லட்சம் ரூபாயில் என்னுடைய தொகை எவ்வளவு என்றால் ரூ.5 லட்சம் ஆகும். ரூ.14 லட்சம் தொகையில் மீதமுள்ள ரூ.9 லட்சம் யாருடையது என்றால் ரூ.5 லட்சம் ராகிணி மற்றும் ரூ.4 லட்சம் வெள்ளைத்தாய் என்பவர்களுடைய தொகையாகும். ராகிணி மற்றும் வெள்ளைத்தாய் எவ்வாறு பழக்கம் என்றால் ஒரேதெருவில் வசித்து வருகிறோம். மூன்று நபர்களுடைய பணத்தை சேர்த்து ரூ.14 லட்சத்திற்கு தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுத்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. ராகிணி மற்றும் வெள்ளைத்தாய் ஆகியோர்களை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். நான் ஏலச்சீட்டு நடத்தி வருகிறேனா என்றால் இல்லை. பிரதிவாதியின் பெயரிலுள்ள அசல் இடப்பத்திரம் யாரிடம் உள்ளது என்றால் வெள்ளைத்தாயிடம் உள்ளது. பிரதிவாதியின் மகன் குபேந்திரன் அல்லிநகரம் காவல்நிலையத்தில் என்மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்காக நான் அவ்வாறு புகார் கொடுக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கடன்பட்ட விபரம் எனக்கு தெரிந்ததால் ரூ.14 லட்சத்தை நான் பிரதிவாதியிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

3. பிரதிவாதி மூன்று மாதங்களுக்குள் திருப்பி தருவதாக சொல்லியுள்ளதில் எவ்வாறு பணத்தை திருப்பி தருவதாக கூறினார் என்றால் மேற்சொன்ன இடத்தை விற்று தருவதாக கூறினார். வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் வெள்ளைத்தாய் மற்றும் ராகிணிக்கு சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், என் பொறுப்பில் கொடுத்தேன். தாவா தொகை பெரிய தொகையாக இருப்பதால் பிரதிவாதி அவரது கணவருக்கு தெரியாமல் வாங்க முடியாது என்றால் சரியல்ல, அவரது கணவருக்கு தெரிந்து வாங்கினார். வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டில் பிரதிவாதியின் கணவர், மகன் ஆகியோர் கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் கையொப்பம் செய்யவில்லை.

4. ரூ.14 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதியில்லை என்றாலும், பிரதிவாதி என்னிடம் ரூ.14 லட்சம் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றாலும், ஏலச்சீட்டு நடத்தியபோது, பிரதிவாதி இரண்டு சீட்டு தவணையை கட்டாததால் தாவா கடனுறுதிச்சீட்டில் அதிகப்படியான தொகையை பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பணம் என்னுடைய பணம் இல்லாத காரணத்தினால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. ராகிணி மற்றும் வெள்ளைத்தாயிற்கு பினாமியாக இருந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 22.07.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.07.22 17:35:12 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
22.07.2026.